## கலாசார மாற்றக் கட்டத்தில் உள்ள குடும்பங்கள் (FICT) பற்றி பங்கேற்பாளர்கள் என்ன கூறுகிறார்கள்

*குழந்தைகளுடன் நன்கு வாழ்வதன் முக்கியத்துவம் மற்றும் அவுஸ்திரேலியாவில் வாழ்க்கையை மேம்படுத்தும் வண்ணம் என் பணம், ஆலோசனை முதலானவற்றை எவ்வாறு பயன்படுத்துதல் உட்பட பல விடயங்களை நான் கற்றுக்கொண்டேன். அவுஸ்திரேலியாவில் மிகவும் முக்கியமான விடயமாகக் காணப்படுவது யாதெனில், எங்களுடைய குழந்தைகளை எவ்வாறு முன்னேற்றுவது என்பதும் மற்றும் அனைத்து அம்சங்களிலும் அவர்களது தேவைகளைக் கவனித்துக் கொள்வதுமாகும்.*
கொங்கோ பெண்

*நாங்கள் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள், ஆயினும், நாங்கள் எல்லோரும் ஒன்றாகச் சந்திப்பதால், எங்களது மனங்களில் இருப்பவற்றை, அதன் உணர்வுளை எங்களுக்குள் பரிமாறிக் கொள்ளலாம் என்பதாக உணர்கிறோம்.*
தமிழ் நபர்

*உணர்வு ரீதியாக, நான் முன்னர் இருந்ததை விட நன்றாக இருப்பதாக உணர்கிறேன். நான் 9 வாரங்களுக்கு வருகை தந்தேன். மேலும் ஒவ்வொரு வாரமும் ஒரு புதிய விடயத்தைக் கற்றுக்கொண்டேன். நான் கலந்துரையாடல் பயிற்சிப் பட்டறையின் போது எனது மூளையினைப் பிரயோகித்தேன் – என்னைப் பொறுத்தவரை அது எனக்கு முக்கிய விடயமாகும். நான் மற்றவர்கள் கூறுவதைச் செவி மடுத்தேன், மற்றவர்களிடமிருந்து கற்றுக் கொண்டேன். அதேபோன்று எனது அனுபவங்களையும் அவர்களிடம் பகிர்ந்து கொண்டேன். அதுவே மிகப் பிரதானமான விடயம். அத்துடன், நான் மிகவும் சந்தோஷமாக இருப்பதாக உணர்கிறேன்.*
ஹஸாரா பெண்

## STARTTS இனைப் பற்றி

STARTTS என்பது சித்திரவதையின் வடுக்கள் மற்றும் அகதிகளின் மனவடுக்கள் ஆகியவற்றிலிருந்து குணமடைவதற்கு மக்கள் மற்றும் சமுதாயங்களுக்கு உதவுவதற்காகவும், மற்றும் அவர்களுடைய வாழ்வினை அவுஸ்திரேலியாவில் மீண்டும் கட்டியெழுப்புவதற்கு உதவுவதற்காகவும், கலாசார ரீதியில் பொருத்தமான உளவியல் சிகிச்சை, ஆதரவு மற்றும் சமூகத் தலையீடுகளை 30 ஆண்டுகளுக்கு வழங்கியுள்ள நிபுணத்துவம் வாய்ந்த, இலாப நோக்கமின்றிய ஓர் அமைப்பாகும். சேவைகள், சட்ட ஆலோசனை மற்றும் கொள்கைசார் வேலைகள் தொடர்பிலான பயிற்சிகளை வழங்குவதன் மூலம் ஒரு நேர்மறையான .மீட்புச் சுற்றுச்சூழலுக்கு STARTTS மேலும் ஊக்கமளிக்கின்றது

**www.startts.org.au**

## எம்மைத் தொடர்பு கொள்க

தலைமை அலுவலகம் CARRAMAR
The Horsley Dr 152-168
Carramar NSW 2163
தொலைபேசி: (02) 9646 6800 பரிந்துரைகள்
தொலைபேசி: (02) 9646 6700

### காரியாலயத்தின் பிற அமைவிடங்கள்

| | |
|---|---|
| Albury | Armidale |
| Auburn | Coffs Harbour |
| Blacktown | Newcastle |
| Fairfield | Wagga Wagga |
| Liverpool | Wollongong |

காரியாலய அமைவிடங்களின் விபரங்களுக்கு www.startts.org.au/contact/ இற்குச் செல்க

Sydney, மற்றும் Bankstown, Parramatta, Dee Why, Lakemba, Penrith,Campbelltown,Rockdale,Tamworth,Griffithஇன்னும்Albury போன்று NSW முழுவதும் வியாபித்துள்ள அமைவிடங்களில், உளவள ஆலோசனை மற்றும் பிற சேவை வகைகளையும் STARTTS மேலும் வழங்குகின்றது. எங்களது வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கு ஏற்ப இந்த அமைவிடங்கள் மாறும். மேலதிக தகவல்களுக்கு .STARTTS இனை தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்

Tamil

சித்திரவதை மற்றும் உணர்வதிர்ச்சிக்கோளாறு என்பவற்றிலிருந்து உயிர் பிழைத்தோருக்கான சிகிச்சை மற்றும் மறுவாழ்வுக்கான சேவை மையம (STARTTS) – NSW

STARTTS



# அவுஸ்திரேலியாவில் வசித்தல்

### கலாசார மாற்றக் கட்டத்தில் உள்ள குடும்பங்கள் (Families in Cultural Transition – FICT)

அகதிப் பின்புலத்திலிருந்து வந்த மக்களுக்கு, அவுஸ்திரேலியாவிலான தமது புதிய வாழ்க்கைக்கு ஆதரவு வழங்கும் ஒரு குழு சார்ந்த திட்டம்.

# அவுஸ்திரேலியாவில் வசித்தல்

## கலாசார மாற்றக் கட்டத்தில் உள்ள குடும்பங்கள் (FICT)

## FICT என்பது யாது?

தமது சமுதாயத்தைச் சேர்ந்த பிற மக்களைச் சந்தித்து, அவர்களுடன் பின்வரும் விடயங்களில் எவ்வாறு கருத்துப் பரிமாற்றத்தை மேற்கொள்ளுவது என்பது தொடர்பாக அகதிகளுக்கு உதவுவதற்கான ஒரு திட்டம்:

- குடும்ப உறவுகளில் ஏற்படும் மாற்றங்களைச் சமாளித்தல்
- உங்கள் பிள்ளைகளுடன் உறவுகளை மேம்படுத்துதல்
- அவுஸ்திரேலிய அமைப்புகள் மற்றும் வாழ்க்கை முறை தொடர்பாக எளிதில் புரிந்து கொள்தல்
- வரவு செலவுத் திட்டம், மொழி பெயர்ப்பாளர்களைப் பயன்படுத்துதல் மற்றும் வேலை தேடுதல் போன்ற நடைமுறைப் பிரச்சினைகளைக் கையாளுதல்



## FICT எப்படி வழங்கப்படுகிறது?

ஆங்கிலத்தையும், மற்றும் ஒரு சமுதாய மொழியினையும் பேசவும், வாசிக்கவும் மற்றும் எழுதவும் முடியுமானவர்களை STARTTS இரு-கலாசார ஒருங்கிணைப்பாளர்களாக வேலைக்குத் தேர்ந்தெடுத்து, பயிற்சியளித்து அத்துடன் ஆதரவும் வழங்குகின்றது. இந்த ஒருங்கிணைப்பாளர்கள் வளர்ந்தோருக்கான குழுக்களை நடத்துவதில் அனுபவம் வாய்ந்தவர்கள்.

இரு-கலாசார ஒருங்கிணைப்பாளர்கள், தமது சமுதாயத்திலிருந்தான பங்குபற்றுனர்களை ஒன்று திரட்டி சமூகத் தளங்களில் FICT யினது பயிற்சித் தொகுதிகளில் பங்கு பெற ஒருங்கு சேர்க்கின்றார்கள். ஒவ்வொரு அமர்வும் 3 மணி நேர நீடிப்புள்ளதாகவும், மற்றும் பங்கேற்பாளர்களுக்கு ஏற்புடைய ஒரு கால நேரத்திலும் மற்றும் இடத்திலும் வழங்கப்படுகிறது.

ஒவ்வொரு FICT குழுவிலும் இலவச குழந்தைப் பராமரிப்பு மற்றும் உணவு ஆகியன வழங்கப்படுகின்றன. மேலும் பங்கு பெறுநர்கள் நிகழ்வின் முடிவில் சமுகமளித்ததற்கான ஒரு சான்றிதழினையும் பெற்றுக் கொள்கின்றனர்.

## FICT பயிற்சித் தொகுதிகள்

- அறிமுகமும் மற்றும் குடியமர்வும்
- ஆதரவு முறைமைகள்
- பணம்
- நெருக்கடி மற்றும் குணமடைதல்
- குடும்பங்கள்
- பிள்ளைகள்
- பாலினம்
- இளைஞர்கள்
- தொழில் வாய்ப்பு
- புதிய சூழலை இரசித்து அனுபவித்தல்
- எமது பிள்ளைகளுடன் மீள இணைதல்

**அனுபவத்தையும் அறிவையும் பகிர்ந்து கொள்வதன் மூலமாக, அவுஸ்திரேலியாவில் தமது வாழ்வை அமைத்துக் கொள்வதற்கு மக்கள் ஒருவருக்கொருவர் உதவுகிறார்கள்.**